தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தஞ்சையில் கெண்டை மீன் வளர்ப்புப் பயிற்சி நாளை தொடக்கம்**

First Published : 21 Jun 2011 01:16:23 PM IST

தஞ்சாவூர், ஜூன் 20: தஞ்சாவூரில் கெண்டை மீன் வளர்ப்புப் பயிற்சி புதன்கிழமை (ஜூன் 22) தொடங்கவுள்ளது.

இதுகுறித்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் என். புண்ணியமூர்த்தி திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தஞ்சாவூர் - நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூன் 22 ஆம் தேதி முதல் ஜூன் 24 ஆம் தேதி வரை கெண்டை மீன் வளர்ப்புப் பயிற்சி நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி நடைபெறும் நாளில் காலை 10 மணிக்கு நேரில் வந்து பெயர்களை பதிவு செய்ய வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04362-255625, 94444 64404 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**25 ஆயிரம் ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு**

First Published : 21 Jun 2011 10:47:25 AM IST

ஈரோடு, ஜூன் 20: ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2008-2009 ஆண்டு செம்மை நெல் சாகுபடி திட்டம் அமல்படுத்தப்பட்டது. கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் நடப்பாண்டில் செம்மை நெல் சாகுபடி பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

செம்மை நெல் சாகுபடியாக தொடங்கிய இந்த திட்டம் கடந்த ஆட்சியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு "ராஜராஜன் 1000' என்ற பெயருடன் சாகுபடி செய்யப்பட்டது.

ஆனால் தற்போது புதிய அரசு மீண்டும் செம்மை நெல் சாகுபடி என்று பெயரை மாற்றியுள்ளது. நடப்பாண்டில் 25 ஆயிரம் ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை உயரதிகாரி தெரிவித்தது: குறைந்த நீர் ஆதாரத்தை கொண்டு அதிக அளவில் நெல் உற்பத்தி செய்ய செம்மை நெல் சாகுபடி செய்யும் திட்டம் கடந்த 2008-ம் ஆண்டு

கொண்டு வரப்பட்டது. இதில் 2008-2009ம் ஆண்டில் 17,100 ஹெக்டேர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 8,057 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டது.

2009-2010ம் ஆண்டில் 16,450 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 15,729 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு 19 ஆயிரம் ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிட்ட இலக்கு எட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 25 ஆயிரம் ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான நெல், உரங்கள் மாவட்டத்தில் உள்ள 14 வட்டார வேளாண்மை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார்.

**விவசாயிகளுக்கு நேரில் உதவும் பயணம்: வேளாண் துறை**

First Published : 21 Jun 2011 01:03:16 PM IST

புதுக்கோட்டை, ஜூன் 20: புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் பயணம் மேற்கொண்டு, விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான அனைத்து உதவிகளையும் செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேலு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 வேளாண் வட்டாரங்கள் உள்ளன. இதில் 498 கிராம ஊராட்சிகள் அடங்கியுள்ளன. விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப செய்திகளையும், அரசு செயல்படுத்தும் வேளாண் திட்டங்களையும் கொண்டு செல்வதில் பல்வேறு இடர்பாடுகள் இருந்து வருகின்றன.

எனவே, இதை நீக்கும் விதத்தில் வேளாண் துறையிலிருந்து உதவி வேளாண்மை அலுவலர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 15 நாள்களுக்கு ஒருமுறை பயணம் மேற்கொண்டு, அந்த ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளுக்கு அரசு வேளாண் திட்டங்களையும், பருவத்தில் சாகுபடி மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்களையும் நேரடியாக விளக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வட்டாரங்களில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் திட்டமிட்ட நாளில் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில் விவசாயிகள் நேரடியாக வேளாண் அலுவலரைத் தொடர்பு கொண்டு திட்டங்கள் குறித்தும், தொழில்நுட்பங்கள் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

மானிய பரிந்துரை சீட்டு:

ஊராட்சிக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலரிடம் மானியத்தில் இடு பொருள்கள் பெறுவதற்கு மானிய பரிந்துரை சீட்டும் பெற்றுக் கொள்ளலாம்.

நிரந்தர பயணத் திட்டம் குறித்து ஊராட்சி அலுவலகங்களில் உள்ள அறிவிப்புப் பலகையில் குறிப்பிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திட்டம் குறித்து குடுமியான்மலையில் உள்ள ஸ்டாமின் கூட்ட அரங்கில் அனைத்து உதவி வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியில், நிரந்தர பயணத் திட்டத்தின்படி ஊராட்சிகளுக்கு நேரில் சென்று அந்தப் பகுதி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கருத்துகளையும், வேளாண் திட்டங்களை விளக்கும் களப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு உதவி வேளாண்மை அலுவலரின் பயணத் திட்டம் குறித்து அறிந்து கொள்வதுடன், வேளாண் தொடர்பான திட்டங்கள், தொழில்நுட்பங்களையும் தெரிந்து கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

**மானிய விலையில் கருவேப்பிலை கன்றுகள்**

First Published : 21 Jun 2011 12:11:20 PM IST

தேனி, ஜூன் 20: பெரியகுளம் அரசு தோட்டக் கலை பண்ணையில் கருவேப்பிலை கன்றுகள் மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து தோட்டக் கலை உதவி இயக்குநர் குமாரவடிவேல், தோட்டக்கலை அலுவலர் நாகதேவன் ஆகியோர் கூறியதாவது: பெரியகுளம் அரசு தோட்டக் கலை பண்ணையில் 40 ஆயிரம் கருவேப்பிலை கன்றுகள் விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ளன. மானிய விலையில் ஒரு கன்று ரூ.5-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தென்மேற்குப் பருவ மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் கருவேப்பிலைக் கன்றுகளை நடவு செய்து பலனடையலாம் என்றனர்.

**விவசாயிகளுக்கு நேரில் உதவும் பயணம்: வேளாண் துறை**

First Published : 21 Jun 2011 01:03:16 PM IST

புதுக்கோட்டை, ஜூன் 20: புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் பயணம் மேற்கொண்டு, விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான அனைத்து உதவிகளையும் செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேலு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 வேளாண் வட்டாரங்கள் உள்ளன. இதில் 498 கிராம ஊராட்சிகள் அடங்கியுள்ளன. விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப செய்திகளையும், அரசு செயல்படுத்தும் வேளாண் திட்டங்களையும் கொண்டு செல்வதில் பல்வேறு இடர்பாடுகள் இருந்து வருகின்றன.

எனவே, இதை நீக்கும் விதத்தில் வேளாண் துறையிலிருந்து உதவி வேளாண்மை அலுவலர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 15 நாள்களுக்கு ஒருமுறை பயணம் மேற்கொண்டு, அந்த ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளுக்கு அரசு வேளாண் திட்டங்களையும், பருவத்தில் சாகுபடி மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்களையும் நேரடியாக விளக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வட்டாரங்களில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் திட்டமிட்ட நாளில் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில் விவசாயிகள் நேரடியாக வேளாண் அலுவலரைத் தொடர்பு கொண்டு திட்டங்கள் குறித்தும், தொழில்நுட்பங்கள் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

மானிய பரிந்துரை சீட்டு:

ஊராட்சிக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலரிடம் மானியத்தில் இடு பொருள்கள் பெறுவதற்கு மானிய பரிந்துரை சீட்டும் பெற்றுக் கொள்ளலாம்.

நிரந்தர பயணத் திட்டம் குறித்து ஊராட்சி அலுவலகங்களில் உள்ள அறிவிப்புப் பலகையில் குறிப்பிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திட்டம் குறித்து குடுமியான்மலையில் உள்ள ஸ்டாமின் கூட்ட அரங்கில் அனைத்து உதவி வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியில், நிரந்தர பயணத் திட்டத்தின்படி ஊராட்சிகளுக்கு நேரில் சென்று அந்தப் பகுதி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கருத்துகளையும், வேளாண் திட்டங்களை விளக்கும் களப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு உதவி வேளாண்மை அலுவலரின் பயணத் திட்டம் குறித்து அறிந்து கொள்வதுடன், வேளாண் தொடர்பான திட்டங்கள், தொழில்நுட்பங்களையும் தெரிந்து கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

**ஆண்டிபட்டி பப்பாளி பழங்களுக்கு நல்ல விலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 21 Jun 2011 12:11:36 PM IST

ஆண்டிபட்டி,ஜூன் 20: ஆண்டிபட்டி பகுதியில் விளையும் பப்பாளி பழங்கள் அதிக சுவையுடன் இருப்பதால் தமிழகம் மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் நேரடியாக வாங்கிச் செல்கின்றனர் இதனால் போதுமான விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் திம்மரசநாயக்கனுர், அனுப்பபட்டி, கண்டமனூர், தெப்பம்பட்டி ஆகிய பகுதிகளில் சுமார் 240 ஏக்கருக்கு மேல் ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வீரிய ரகமான டேக்கிடோ விதைகள் மூலம் விவசாயம் செய்யப்பட்டு வந்தது.

தற்போது ஜப்பானில் சுனாமி தாக்கியதால் இறக்குமதியாகவில்லை. அதற்குப் பதிலாக தைவானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குட்டை ரகமான ரெட் லேடி வகை விதைகள் தற்போது பயிரிடப்பட்டு வருகின்றன. இந்த ரெட் லேடி வகை செடிகளை ஏக்கருக்கு 1500 வரை நடலாம். நட்டு 10 மாதங்கள் கழித்து பலன்தர ஆரம்பிக்கும். 20 மாதங்களில் இருந்து 3 ஆண்டுகள் வரை நல்ல பலன் தரும்.

ஒரு மரத்திலிருந்து 10 நாள்களுக்கு ஒரு முறை 10-லிருந்து 12 கிலோ வரை பழங்களைப் பறிக்கலாம். இப் பகுதியில் விளையும் பப்பாளி பழங்கள் நல்ல கலரிலும், அதிக சுவையுடனும் இருப்பதால். சென்னை, கோவை, மதுரை, திருச்சி மற்றும் கேரளத்திலிருந்தும் வியாபாரிகள் நேரடியாகவே வந்து வாங்கிச் செல்கின்றனர். இது குறித்து விவசாயி ராஜா கூறியது: நான் கடந்த 8 ஆண்டுகளாக பப்பாளி விவசாயம் செய்து வருகிறேன்.

நல்ல விளைச்சலும், போதிய வருமானமும் கிடைப்பதால் இந்த விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறேன்.


ஆண்டிபட்டி தோட்டக்கலைத் துறையிலிருந்து வெள்ளைப்பூச்சி தாக்குதல் பற்றியும் அதனை தடுக்க தேவையான அறிவுரைகளும், பூச்சிமருந்து மற்றும் உரங்களையும் வழங்கி வருகிறார்கள் என்றார்.

தினமலர்

**வளர்ப்பிற்குரிய முக்கிய அலங்கார மீனினங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,00:00 IST





**நவீன தொழில்நுட்பம்**

நன்னீர் மீன்கள், குட்டி ஈனுபவை மற்றும் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்பவை என இரு வகைப்படும். குட்டியிட்டு இனப்பெருக்கம் செய்பவைகளில் கப்பி, மொலி, பிளாட்டி, ஸ்வோர்ட்டேய்ஸ் ஆகியவைகள் சாதாரணமாகக் கண்ணாடித் தொட்டியை அலங்கரிப்பவை. கப்பி: ஆண் மீன்கள் 2.5 செ.மீ. நீளமும், பெண் மீன்கள் 5 செ.மீ. நீளம் வரையிலும் வளர்கின்றன. 7.5-8.5 கார அமில நிலையும் வளர்ப்பிற்கேற்ப தட்பவெப்ப சூழ்நிலையும் (26-30 டிகிரி செ.கி) ஏற்றவை. 4-6 வார காலத்திற்கு ஒருமுறை 50 குட்டிகளை இடுகின்றன.

**மோலி:** கறுப்பு, வெள்ளை, ஆரஞ்சு மற்றும் சாக்லேட் நிறமுடையவை. 9 செ.மீ. நீளமும், 10-15 கிராம் எடை வரையிலும் வளர்பவை. 5 வாரத்திற்கு ஒரு முறை 250 குட்டிகளை இடும். ஆண் மீன்களின் முதுகுத் துடுப்பு நிமிர்ந்து விசிறி போல் காணப்படும்.

**பிளாட்டி:** பல்வேறு வண்ண வகையினை உடையது. ஆண் மீன்கள் 4 செ.மீ. வரையிலும், பெண் மீன்கள் 5 செ.மீ. வரையிலும் 3-4 வார இடைவெளிக்கு ஒரு முறை 50-75 குட்டிகளை இடும். 10 பெண் சினை மீன்களுக்கு ஒரு ஆண் மீன் என இருப்பு செய்ய வேண்டும்.

**ஸ்வோர்ட்டெய்ல்:** ஆண் மீன்கள் 8 செ.மீ. வரையிலும் பெண் மீன்கள் 12 செ.மீ. நீளம் வரையிலும் வளர்கின்றன. 5 பெண் மீன்களுக்கு ஒரு ஆண் மீன் போதுமானது. ஆண்மீனின் வால் துடுப்பு வீரனின்வாள் போல் நீண்டு வனப்புடன் காணப்படும்.
எல்லா வகையான குட்டியிடும் அலங்கார மீன்களுக்கும் நீர்ப்பாசிகள் மறைவிடமாகவும் பாதுகாப்பாகவும் விளங்குகின்றன. புழு, பூச்சி போன்ற உயிர் உணவுகளையே மீன்கள் விரும்பி உண்கின்றன. எனவே சினை மீன்களின் இனப்பெருக்க உணர்ச்சியினைத் தூண்ட புரதம் நிறைந்த உணவுகளையும் தகுந்த மறைவிடங்களையும் அளித்து குட்டிகளைப் பாதுகாத்து உற்பத்தி செய்ய வேண்டும்.
முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்ற மீன்களில் கோய் கெண்டை, செவ்வால் சுறா, பொன்மீன், ரோசி பாரிப், டைகர் பாரிப், டெட்ரா, கவுராபி, பைட்டர், ராமிரன் நீல சிக்ளிட், அவுரோங்கல், ஏஞ்சல், ஆஸ்கார் ஆகியவை கண்ணாடித் தொட்டிகளை அலங்கரித்து கண்களுக்கு விருந்தூட்டுபவை. வியாபார ரீதியில் வளர்த்து உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு ஏற்றவை.

**பொன்மீன்:** சிவப்பு ஒராண்டா, சிங்கத்தலை, முட்டைக்கண் முத்துச்செதில், காரிகோ, கருப்புமூர் போன்ற நூற்றுக்கணக்கான வகையான பொன்மீன்கள் உள்ளன. இம்மீன்கள் தாவர மற்றும் புழுபூச்சி போன்ற மாமிச உணவுகளை உண்டு 4 மாதகாலத்தில் 20 முதல் 25 கிராம் உடல் எடையினைப்பெறும். 5 முதல் 6 மாத காலத்தில் பருவ முதிர்ச்சியடைந்து இனப்பெருக்கம் செய்கின்றன.

காரத்தன்மையுடையதும் (7.5 - 8.5) மிதமான வெப்பநீரும் (25-28.5 டிகிரி செ.கி), மித கடின நீரும் (150-250 மி.கி/லி) பொன் மீனுக்கு ஏற்ற நீர்ச்சூழல் குணங்கள் 25 கிராம் எடையுள்ள பொன்மீன் கிட்டத்தட்ட 750 ஒட்டும் தன்மையுள்ள முட்டைகளை நீர்ப்பாசிகளில் இடுகின்றன. சிறிய நூல் போன்ற நுண் குஞ்சுகள் 65-72 மணி நேரத்தில் பொரிந்து வெளிவருகின்றன.

பொன்மீன்களைத் தொட்டிகளில் தனியாகத்தான் வளர்க்க வேண்டும். (தகவல்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை-1)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**சிறு தானியங்களில் இருந்து மதிப்பு கூட்டிய பொருட்கள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,00:00 IST




இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு தேவையான புரோட்டீன் சத்து, கொழுப்பு சத்து, சர்க்கரை சத்து இல்லாத தானிய வகைகள் குறைவாக உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த கேழ்வரகு, ராகி ஆகியவற்றில் இருந்து மதிப்பு கூட்டிய பொருட்களாக அவுல் வகையில் மதிப்பு கூட்டிய பொருட்களாக கடந்த ஐந்து ஆண்டுகளாக உணவு பதனிடும் துறையில் கோவை மாவட்டத்தில் மாலா என்பவர் பல சேவைகளை செய்து வருகிறார்.

சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு, ராகி ஆகியவற்றை இயற்கை முறையில் உற்பத்தி செய்து சான்றிதழ் பெற்ற விவசாயிகளிடம் இருந்து அவர் பெற்றுக்கொள்கிறார். மதிப்பு கூட்டும் தொழிலில் இவர் முதலீடாக ஒரு லட்சம் ரூபாய்க்கு இயந்திர தளவாடங்களை வாங்கியுள்ளார். உற்பத்தி செய்யப்பட்ட சிறுதானியம், மதிப்பு கூட்டிய பொருட்களை வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை மூலமாக தொழில் ரீதியில் விற்பனை செய்து வருகிறார். இவர் உற்பத்தி செய்த மதிப்பு கூட்டிய பொருட்கள் பழமுதிர்ச்சோலை, உழவர்சந்தை, நீல்கிரிஸ் பல்பொருள் அங்காடி ஆகியவற்றில் கிடைக்கின்றன. இது மட்டுமல்லாமல் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட சேமியா ஆகியவற்றையும் பொதுமக்களுக்கு கொடுத்து விற்பனை செய்து வருகிறார். தொடர்புக்கு: மாலா, கோவை, 94433 49748.-கே.சத்தியபிரபா, உடுமலை.

**மாம்பழங்களை கால்சியம் கார்பைடு உபயோகித்து பழுக்கவைப்பதால் ஏற்படும் தீமைகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,00:00 IST



கால்சியம் கார்பைடு: இது ஒரு ரசாயனப் பொருள். சுத்தமான ரசாயனப் பொருள் வெண்மை நிறமாகவும், சற்று கலப்படமான நிலையில் கருப்பு கலந்த சாம்பல் நிறத்துடனும் இருக்கும். வெள்ளைப்பூண்டின் வாசனை சிறிதளவு இருக்கும். இதில் ஆர்சனிக் மற்றும் பாஸ்பரஸ் ஹைட்ரைடு போன்ற நச்சுப் பொருட்கள் இருக்கும். இவற்றின் மீது ஈரம் பட்டவுடன் அசிட்டிலின் என்ற வாயுவை வெளியேற்றுகின்றது. இவ்வாயு பழங்களைப் பழுக்கவைக்கின்றது. இதன் விலை கிலோ ரூ.25-30 வரை இருக்கும். ஒரு கிலோ இவ்வுப்பைக் கொண்டு சுமார் 200 கிலோ வரை மாம்பழங்களை பழுக்க வைக்க முடியும். தேவையான அளவு கார்பைடு உப்பை ஒரு பேப்பரில் கட்டி பழப்பெட்டிகளை லாரியிலோ குடோனிலோ அடுக்கும்போது அதனுள் வைத்துவிட்டால் 24-48 மணி நேரத்திற்குள் பழங்களின் மேற்தோல் முழுவதும் ரகத்திற்கு ஏற்றவாறு கலர் மாறிவிடும். முற்றிய காய்களிலுள்ள ஈரம் மற்றும் காய்கள் சுவாசிக்கும்போது ஏற்படக்கூடிய வெப்பத்தாலும் காய்கள் எளிதில் கலர் மாற உதவுகின்றன.

**பழுக்கும் முறை:** முற்றாத காய்களை பழுக்கவைக்க சற்று அதிகமாக கற்கள் வைக்க வேண்டும். கற்கள் மூலம் பழுத்த பழங்களின் மேல்தோல் மட்டுமே மஞ்சள் நிறமாக மாறும். அதன் உள்ளே எந்தவிதமான ரசாயன மாற்றம் இன்றி அப்படியே இருக்கும். அதனால் இனிப்பு சுவை குறைந்து பழங்கள் மணமின்றி இருக்கும். இயற்கையிலேயே பழுத்த பழங்களின் மேற்தோல் ஒரே சீராக கலர் மாறி இருக்காது. ஆனால் கார்பைடு உபயோகித்து பழுக்கவைத்த பழங்களின் மேற்தோல் ஒரே சீராக மஞ்சள் நிறமாகத் தோற்றமளிக்கும். மணம் குன்றி இருக்கும். இதை வைத்தே கல் வைத்து பழுக்கவைத்த பழங்களைக் கண்டறியலாம். இந்த வேதிப்பொருள் மேலைநாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது.

**உடல்நலக்கேடு:** கால்சியம் கார்பைடிலுள்ள ஆர்சனிக் மற்றும் பாஸ்பரஸ் ஹைட்ரைடு உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை. இதன் அளவு அதிகமாகும்போது புற்றுநோய் வர வாய்ப்புள்ளது.

சுமார் 33-35 சதவீத அசிட்டிலின் வாயுவை ஒருவர் சுவாசித்தால் 5-7 நிமிடங்களில் மயக்கமடையலாம். கார்பைடு உபயோகித்து பழுக்க வைத்த பழங்களை உண்பதால் வாந்தி, பேதி, நெஞ்சில் எரிச்சல், குடற்புண், கண்களில் எரிச்சல், மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் உணவை விழுங்குவதில் சிரமம் போன்ற உடல்நலக்கேடுகள் உண்டாகலாம். தொடர்ந்து இவ்வாறு பழுக்க வைத்த பழங்களைச் சாப்பிட்டால் தூக்கமின்மை, தலைவலி, குறைந்த ரத்த அழுத்தம் போன்ற உடல்நலக்கேடுகள் உண்டாகும். கர்ப்ப காலத்தில் பெண்கள் கண்டிப்பாக செயற்கையாக பழுக்க வைத்த பழங்களை உண்ணக்கூடாது. பழங்களின் மேற்தோல் ஒரே சீராக மாறி இருந்தால் அது கல்வைத்து பழுக்க வைத்தது என்பதை கண்டறியலாம். தெரிந்தோ தெரியாமலோ கல்வைத்து பழுத்த பழங்களை வாங்கினால் தண்ணீரில் 5 நிமிடம் நன்கு கழுவ வேண்டும். பழத்தை அப்படியே சாப்பிடாமல் தோலை நீக்கிவிட்டு சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உண்ணலாம். இப்பழங்களை அதிக நாட்களுக்கு சேமித்து வைக்க இயலாது. மாம்பழ சீசன் துவங்கியஉடனே சந்தைக்கு வரும் பழங்கள் பெரும்பாலும் கல்வைத்து பழுக்க வைத்ததாக இருக்கலாம். பொதுவாகவே ஜூன்-ஜூலை மாதங்களில் சந்தைக்கு வரும் பழங்கள் இயற்கையாகவே பழுக்க வைத்தவையாக இருக்கும்.**கொ.பாலகிருஷ்ணன், பேராசிரியர் (பயிர் வினையியல்),கு.சிவசுப்பிரமணியம், பேராசிரியர் மற்றும் தலைவர்,விதை நுட்பவியல் துறை,வேளாண்மைக் கல்லூரி,**
**மதுரை-625 104.**

## கடந்த 2010-11ம் நிதி ஆண்டில்நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி ரூ.6,840 கோடியாக உயர்வு

ஜூன் 22,2011,01:08



கொச்சி:நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, கடந்த 2010-11ம் நிதியாண்டில், 6,841 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2009-10ம் நிதி ஆண்டில் 5,561 கோடி ரூபாயாக இருந்தது. ஆக, இவற்றின் ஏற்றுமதி 23 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

இந்திய நறுமணப் பொருள்கள் வாரியம் வெளியிட்டுள்ள மதிப்பீட்டின் படி, கடந்த நிதியாண்டில், நம் நாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட, நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, அளவு, டாலர், மற்றும் ரூபாய் மதிப்பின் அடிப்படையில், சிறப்பாக வளர்ச்சி கண்டுள்ளது.

கடந்த நிதியாண்டில், அளவின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 5 லட்சத்து 25 ஆயிரத்து 750 டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இது, இதற்கு முந்தைய 2009-10ம் நிதியாண்டில், 5 லட்சத்து 2 ஆயிரத்து 750 டன்னாக இருந்தது.

இதே ஆண்டுகளில், அமெரிக்க டாலர் மதிப்பின் அடிப்படையிலான, இதன் ஏற்றுமதி, 117.38 கோடி டாலரிலிருந்து, 150.29 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

மதிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டுகளில், மிளகு ஏற்றுமதி, 19 ஆயிரத்து 750 டன்னிலிருந்து, 18 ஆயிரத்து 850 டன்னாக குறைந்துள்ளது எனினும், இதன் விலை கிலோ ஒன்றுக்கு 158.95 ரூபாய் என்ற அளவிலிருந்து, 203.28 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதன் ஒட்டுமொத்த ஏற்றுமதி, டாலர் மதிப்பில், 8.41 கோடி டாலராகவும், ரூபாய் மதிப்பில், 383 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இது,முந்தைய நிதியாண்டில் முறையே,6.62 கோடி டாலர் மற்றும் 313.92 கோடி ரூபாயாக இருந்தது.அதேசமயம்,சென்ற நிதியாண்டில், ஏலக்காய் (சிறியது)ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 1,175 டன்னாகவும், இது ரூபாய் மதிப்பு அடிப்படையில், 132.16 கோடி ரூபாயாகவும் உள்ளது.

முந்தைய நிதியாண்டில், இதன் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 1,975 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 165.70 கோடி ரூபாயாக அதிகரித்து காணப்பட்டது. ஆனால்,ஏற்றுமதிக்கான ஒரு கிலோ சிறிய ஏலக்காய் விலை இதே ஆண்டுகளில், 839 ரூபாயிலிருந்து, 1,125 ரூபாயாக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.மிளகாய் ஏற்றுமதி இதே ஆண்டுகளில், 2 லட்சத்து 4 ஆயிரம் டன்னிலிருந்து, 2 லட்சத்து 40 ஆயிரம் டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இதையடுத்து, மதிப்பின் அடிப்படையிலும், இதன் ஏற்றுமதி 1,292 கோடி ரூபாயிலிருந்து, 1,536 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆனால், இதன் விலை அதிக மாற்றமின்றி இருந்தது.

அதாவது, முந்தைய ஆண்டு, ஏற்றுமதிக்கான ஒரு கிலோ மிளகாயின் விலை, 63.32 ரூபாயாக இருந்தது, இது, சென்ற நிதியாண்டில், 63.98 ரூபாயாக சற்று உயர்ந்திருந்தது.இஞ்சி ஏற்றுமதி, 5,500 டன்னிலிருந்து, 15,750 டன்னாக மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 46.75 கோடி ரூபாயிலிருந்து, 121.31 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது.மஞ்சள் ஏற்றுமதி, இதே ஆண்டுகளில், 50 ஆயிரத்து 750 டன்னிலிருந்து, 49 ஆயிரத்து

250 டன்னாக சற்று குறைந்துள்ளது. ஆனால், மதிப்பீட்டு ஆண்டுகளில், ஒரு கிலோ மஞ்சள் விலை, 75.12 ரூபாயிலிருந்து, 142.71 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இதனால், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 381 கோடி ரூபாயிலிருந்து, 702.85 கோடி ரூபாயாக மிகவும் அதிகரித்துள்ளது.தனியா ஏற்றுமதி, அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் குறைந்து போயுள்ளது. அதாவது, 2009-10ம் நிதியாண்டில், 47 ஆயிரத்து 250 டன்னாக இருந்த இதன் ஏற்றுமதி, சென்ற நிதியாண்டில், 40 ஆயிரத்து 500 டன்னாக சரிவடைந்துள்ளது. முந்தைய நிதியாண்டில், ஏற்றுமதிக்கான ஒரு கிலோ தனியாவின் விலை, 47.80 ரூபாயாக இருந்தது. ஆனால், இது சென்ற நிதியாண்டில், 41.14 ரூபாயாக குறைந்து போனது.

இதனால், மதிப்பின் அடிப்படையிலான, இதன் ஏற்றுமதி 225.85 கோடி ரூபாயிலிருந்து, 166.63 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.

சீரகம் ஏற்றுமதி, 49 ஆயிரத்து 750 டன்னிலிருந்து 32 ஆயிரத்து 500 டன்னாக குறைந்துள்ளது. மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 548 கோடி ரூபாயிலிருந்து, 396 கோடி ரூபாயாக சரிவடைந்துள்ளது.

பூண்டு ஏற்றுமதி, 10 ஆயிரத்து 750 டன்னிலிருந்து, 17 ஆயிரத்து 300 டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இதே ஆண்டுகளில், ஏற்றுமதிக்கான ஒரு கிலோ பூண்டின் விலை 28.30 ரூபாயிலிருந்து, 40.33 ரூபாயாக உயர்ந்துள்ளது.

மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 30.42 கோடி ரூபாயிலிருந்து, 70 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

இவை தவிர, கறிமசாலா பவுடர் ஏற்றுமதி 189 கோடி ரூபாயிலிருந்து, 210 கோடி ரூபாயாகவும், புதினா மற்றும் புதினா பொருள்கள் ஏற்றுமதி 1,190 கோடி ரூபாயிலிருந்து, 1,697 கோடி ரூபாயாகவும், நறுமணப் பொருள்கள் எண்ணெய் மற்றும் ஓலியோ ரெசின்ஸ் ஏற்றுமதி 709 கோடி ரூபாயிலிருந்து, 910 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

நம்நாட்டிலிருந்து, அமெரிக்கா, சீனா, மலேசியா, ஐக்கிய அரபு நாடுகள், இங்கிலாந்து, வங்க தேசம், ஜெர்மனி, பாகிஸ்தான், இலங்கை, ஜப்பான், சிங்கப்பூர், தென்னாப்ரிக்கா, இந்தோனேஷியா, பிரேசில், ரஷ்யா, வியட்நாம், தாய்லாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு, நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.கடந்த 2010-11ம் நிதியாண்டில், நம்நாட்டிலிருந்து, அமெரிக்காவிற்கு, 42 ஆயிரத்து 816 டன் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு, 989 கோடி ரூபாயாகும். சீனாவிற்கான, இதன் ஏற்றுமதி,13

ஆயிரத்து 58 டன்னாக உள்ளது.

இதன் மதிப்பு, 637.65 கோடி ரூபாய்.மேலும், மலேசியா(502 கோடி ரூபாய்), ஐக்கிய அரபு நாடுகள் (355 கோடி ரூபாய்), இங்கிலாந்து (335 கோடி ரூபாய்), பாகிஸ்தான் (253 கோடி ரூபாய்), இலங்கை (240 கோடி ரூபாய்), சிங்கப்பூர் (194 கோடி ரூபாய்),தென்னாப்ரிக்கா (132 கோடி ரூபாய்) போன்ற நாடுகளுக்கும், நம்நாட்டிலிருந்து நறுமணப் பொருள்கள், அதிகளவில் ஏற்றுமதியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**நடப்பாண்டு மே மாதத்தில் ரப்பர் உற்பத்தி 60,000 டன்**

ஜூன் 22,2011,01:02



கொச்சி:சென்ற மே மாதம், நாட்டின் இயற்கை ரப்பர் உ ற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து 59 ஆயிரத்து 700 டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த 2010ம் ஆண்டு மே மாதம் 56 ஆயிரத்து 400 டன் என்ற அளவில் இருந்தது.

இதே மாதங்களில், இயற்கை ரப்பர் பயன்பாடு 2 சதவீதம் உயர்ந்து 79ஆயிரத்து 150 டன் என்ற அளவில் இருந்து, 81ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது.

நடப்பு ஆண்டு மே மாதம், இயற்கை ரப்பருக்கான தேவை,முந்தைய ஏப்ரல் மாதத்தை விட 2 சதவீதம் குறைந்து, 81ஆயிரம் டன் என்ற அளவில் இருந்தது. இது, சென்ற ஏப்ரல் மாதத்தில் 82ஆயிரத்து 500 டன்னாக அதிகரித்து காணப்பட்டது.சென்ற மே மாதம் இயற்கை ரப்பர் ஏற்றுமதி, 18 சதவீதம் அதிகரித்து 1,742 டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டு மே மாதத்தில், 1,478 டன்னாக இருந்தது என, ரப்பர் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பல மாநிலங்களில் அதிக உற்பத்திகோதுமை கொள்முதல் இலக்கை விஞ்சி சாதனை**

ஜூன் 22,2011,01:03



புதுடில்லி:கோதுமை உற்பத்தி அதிகரித்துள்ளதால், விவசாயிகள் அதிகளவிலான கோதுமையை இந்திய உணவு கழகத்திடம் வழங்கி வருகின்றனர். இதனால், நடப்பு 2011-12 ஜூன் வரையிலான கொள்முதல் பருவத்தில், இதுவரை 2.74 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அதிகாரபூர்வ கொள்முதல் காலம்,முடிந்த போதிலும், இந்திய உணவுக் கழகம் மற்றும் மாநில உணவு தானியங்கள் கொள்முதல் கழகங்கள் கோதுமையை அதிகளவில் கொள்முதல் செய்து வருகின்றன. இதனால், வரும் 30ம் தேதிக்குள் நாட்டின் ஒட்டு மொத்த கோதுமை கொள்முதல், சாதனை அளவாக 2.80 கோடி டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.சென்ற 2010-11ம் கொள்முதல் பருவத்தில், 2.53 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசம்,பீகார், ராஜஸ்தான் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களில் கோதுமை சாகுபடி சிறப்பாக உள்ளது. அதனால், கோதுமை கொள்முதலில், இம்மாநிலங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது.

பஞ்சாப் மாநிலம், நடப்பு பருவத்தில் 1.10 கோடி டன் கோதுமையை, மத்திய, மாநில உணவுத் தொகுப்பிற்கு வழங்கியுள்ளது. கடந்தாண்டு இது 1.01 கோடி டன் என்ற அளவில் இருந்தது. இதே போல், அரியானா மாநில விவசாயிகள், நடப்பு பருவத்தில் 69 லட்சம் டன் (63 லட்சம் டன்) கோதுமையை வழங்கியுள்ளனர். உத்தரபிரதேச மாநில அரசி, கடந்த ஆண்டை விட நடப்பாண்டில், 30 லட்சம் டன் கோதுமையை கூடுதலாக கொள்முதல் செய்துள்ளது. ராஜஸ்தான் அரசி, நடப்பு ஆண்டில் 12.50 லட்சம் டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது.

இது, கடந்தாண்டு 4.75 லட்சம் டன்னாக இருந்தது. மத்திய பிரதேச அரசி, நடப்பாண்டில் 49 லட்சம் டன் (36 லட்சம் டன்) கோதுமையை கொள்முதல் செய்துள்ளது.

கோதுமை விளையும் மாநிலங்களில், இவ்வாண்டு அதிக விளைச்சல் உள்ளதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மத்திய அரசி, ஒரு குவிண்டால் கோதுமையின் குறைந்தபட்ச ஆதரவு விலை, 1,120 ரூபாய் என நிர்ணயித்துள்ளது. மேலும், ஒரு குவிண்டாலுக்கு, கூடுதலாக 50 ரூபாய் ஊக்கத் தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

**கரும்புக்கு விலை ரூ.3,000 நிர்ணயிக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,01:15 IST

ஆத்தூர் : "கரும்பு அறுவடை செய்யும் தொழிலாளர்களின் கூலி உயர்ந்துள்ளதால், டன்னுக்கு, 3,000 ரூபாய் வழங்க வேண்டும்' என, ஆத்தூர் பகுதி கரும்பு சாகுபடி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சேலம், ஆத்தூர், நாமக்கல், ராசிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஈரோடு, தர்மபுரி உள்ளிட்ட பகுதிகளில், 7.2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. அந்த கரும்புகளை, 17 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கும், 26 தனியார் சர்க்கரை ஆலைகள் என, 42 சர்க்கரை ஆலைகளுக்கு அரவைக்கு விவசாயிகள் அனுப்பி வருகின்றனர். ஆத்தூர், மஞ்சினி, காட்டுக்கோட்டை, தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில் விளைந்த கரும்புகளை அறுவடை செய்யும் பணிகள் தீவிரமடைந்துள்ளது. விளைந்த கரும்புகளை அறுவடை செய்வதற்கு, போதிய கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. அதனால், விழுப்புரம் திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், திருவண்ணாமலை பகுதியை சேர்ந்த தொழிலாளர்களுக்கு, டன்னுக்கு, 600 முதல், 800 ரூபாய் வரை கூலி கொடுத்து அறுவடை செய்ய வேண்டியுள்ளது. தொழிலாளர்களின் வெட்டுக்கூலி மற்றும் லாரி வாடகை உயர்ந்துள்ளதால், செலவு செய்த தொகை கூட கிடைக்காத நிலையில் கரும்பு விவசாயிகள் நஷ்டப்படுகின்றனர். இதுகுறித்து, ஆத்தூர் மஞ்சினியை சேர்ந்த கரும்பு விவசாயி துரைசாமி கூறியதாவது: கரும்பு சாகுபடிக்கு ஏக்கருக்கு, உரம், மருந்து என, 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால், 35 முதல், 40 டன் வரை மகசூல் இருக்கும். கடந்தாண்டில் கரும்பு அறுவடை செய்ய டன்னுக்கு, 300 முதல், 400 ரூபாய் கூலி இருந்தது. தற்போது, ஆட்கள் பற்றாக்குறை காரணமாக, டன்னுக்கு, 800 ரூபாய் வரை வெட்டுக்கூலியாக வழங்க வேண்டியுள்ளது. தவிர, டீஸல் விலை உயர்வு காரணமாக, லாரி வாடகையும் உயர்ந்துள்ளது. கரும்பு விவசாயிக்கு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் கிடைப்பதே அரிதாக உள்ளது. கரும்பு வெட்டுக்கூலி உயர்ந்துள்ளதால், மத்திய, மாநில அரசுகள் கரும்புக்கு, 2,500 முதல், 3,000 ரூபாய் விலை வழங்க வேண்டும். கூடுதல் விலை அறிவிக்க வில்லையெனில் கரும்பு சாகுபடி பாதிப்பதோடு, விளை நிலம் வீட்டுமனைகளாகவும் மாறும் அபாயம் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மஞ்சள் பயிரில் அதிக மகசூல் தோட்டக்கலை துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,01:20 IST

நாமக்கல் : மஞ்சள் பயிரில் மகசூல் அதிகரிக்க தொழில் நுட்ப முறைகளை கடைபிடிக்க வேண்டும், என எருமப்பட்டி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அசோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: எருமப்பட்டி வட்டாரத்தில், மஞ்சள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விதை மஞ்சள் விதைப்பதற்கு முன், கார்பன்டசிம் மருத்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் வீதம் கலந்து, நீரில் இருபது நிமிடம் உலர வைத்து பின் நடவு செய்ய வேண்டும். விதை மஞ்சளை துண்டாக வெட்டாமல், முழு மஞசளாக பயன்படுத்த வேண்டும். நடவின் போது, ஏக்கருக்கு உயிர் பூஞ்சானக்கொல்லியான ட்ரைக்கோடெர்மா விரிடியை இரண்டு கிலோ என்ற அளவில் தொழு எருவுடன் கலந்து ஈரம் இருக்கும் போது, வயலில் தூவ வேண்டும். மேலும், மூன்றாம் மாதம் மீண்டும் ஒரு முறை கொத்தி மண் அணைக்கும் போது, ஏக்கருக்கு ஒரு கிலோ ட்ரைக்கோடெர்மா விரிடி இடவேண்டும். இந்த தொழில் நுட்ப முறைகளை பின்பற்றினால், மஞ்சளில் தோன்றும் கிழங்கு அழுகல் நோயை தவிர்க்கலாம்.

மஞ்சளுக்கு அடியுரமாக, ஏக்கருக்கு தொழு உரம் நான்கு டன், நான்கு கிலோ அசோஸ்பைரில்லம், நான்கு கிலோ பாஸ்போபேக்டீரியா, 80 கிலோ வேப்பம்புண்ணாக்கு, 22 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 12 கிலோ பொட்டாஷ் ஆகிய உயரங்களை இடவேண்டும். மஞ்சள் நீண்டகால பயிராததால், மேலுரமாக ஒவ்வொரு முறையும், 22 கிலோ யூரியா மற்றும் 12 கிலோ பொட்டாஷ் உரத்தை நான்கு மறை கொடுக்கலாம். நடவு செய்த 30வது, 60வது, 90வது மற்றும் 120வது நாட்களில் இடவேண்டும். நடவு செய்த, 30வது நாளில் மேலுரம் இடும்போது அதனுடன், 12 கிலோ பெர்ரஸ் சல்பேட் மற்றும் ஆறு கிலோ ஜிங்க் சல்பேட் இடுவதால், செடிகளில் தோன்றும் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையை தவிர்த்து மகசூல் அதிகரிக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஆடியில் மஞ்சள் விலை உயரும்: ஈரோடு விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,01:40 IST

ஈரோடு: மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காததால், வரத்தும் குறைந்துள்ளது. ஆடி மாதத்தில் மஞ்சள் விலை உயர வாய்ப்புள்ளது என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.நடப்பாண்டு மஞ்சள் விளைச்சல் அதிகரிப்பால், ஃபிப்ரவரி மாதம் துவக்கத்தில் இருந்து வரத்து அதிகரித்து, மஞ்சள் குவிண்டால் விலை குறைந்து கொண்டே வந்தது. மே மாதம் 6,000 ரூபாய் வரை குறைந்தது. எனினும், ஒரு சில விவசாயிகள் மேலும் விலை குறையும் எனக்கருதி, மஞ்சளை அதிகளவு விற்பனை செய்தனர். இதை பயன்படுத்திய வெளிமாநில வியாபாரிகளும் அதிகளவு மஞ்சள்

வாங்கி பதுக்கி வைத்து வருகின்றனர். மண்டிகளுக்கு வரத்து குறைந்த நிலையிலும் விலை உயராததால், விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்த தொகையை கூட எடுக்க முடியாமல், பெரும் நட்டத்துக்கு ஆளாகியுள்ளனர். பலர் வீட்டிலேயே இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். ஈரோடு மஞ்சள் மண்டிகளுக்கு நாளுக்கு நாள் வரத்தும் குறைவாகவே உள்ளதால், வெளிமாநில வியாபாரிகளும் வருகை குறைந்து காணப்படுகிறது. வரும் ஆடி மாதத்தில் விலை உயர வாய்ப்புள்ளது என விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி: ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு விரலி மஞ்சள் குவிண்டால் 7,209ல் இருந்து 8,114 ரூபாய், கிழங்கு 5,930ல் இருந்து 6,657 ரூபாய்க்கு ஏலம் போனது. 278 மூட்டைகள் வரத்தானதில் 229 மூட்டைகள் விற்பனையானது. வெளிச்சந்தையில் விரலி 5,110ல் இருந்து 8,039 ரூபாய், கிழங்கு 4,869ல் இருந்து 6,569 ரூபாய்க்கு ஏலம் போனது. கோபி சங்கத்தில் விரலி 5,610ல் இருந்து 8,239 ரூபாய், கிழங்கு 5,319ல் இருந்து 6,769 ரூபாய்க்கு ஏலம் போனது.

**விலங்குகளால் பயிர் பாதிப்பு நிவாரணம் வழங்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,01:36 IST

ஈரோடு: விலங்குகளால் ஏற்படும் பயிர்கள் சேதத்துக்கு உரிய நிவாரணம் வழங்க, விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு கோரியுள்ளது.ஈரோடு மாவட்ட விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் வடிவேலு தலைமையில் நடந்தது. ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் மயிலால் சூரியகாந்தி, தக்காளி, மக்காச்சோளம் மற்றும் இதர பயிர்கள் நாசமடைகின்றன. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மயில் தொல்லையை தடுக்க கோரியம், மயிலை வனத்துறையினர் பிடித்து காட்டில் விடக்கோரியும், பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணமும் கிடைக்கவில்லை. எனவே, வனத்துறையினர் விவசாய நிலங்களில் வாழ்ந்து வரும் மயில்களை பிடித்து வனத்தில் விட வேண்டும். மயில் மற்றும் வன விலங்குகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு அரசு நிவாரணத் தொகை வழங்க வேண்டும். விவசாயி கந்தசாமியை விடுதலை செய்ய வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் முனுசாமி, துணை தலைவர் துளசிமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**காய்கறிகளின் விலை திடீர் உயர்வு காலிப்ளவர் ஒன்று ரூ.40க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,00:12 IST

தூத்துக்குடி : வரத்து குறைவால் தூத்துக்குடி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. பெரிய சைஸ் காலிப்ளவர் பூ ஒன்று நேற்று 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரையிலும் உச்சகட்டத்தில் இருந்த காய்களில் விலைகள் படிப்படியாக விலை குறையத் தொடங்கியது. தற்போது மார்க்கெட்டிற்கு வரும் காய்கறிகளின் வரத்து தற்போது வெகுவாக குறைந்துள்ளது. இதன் காரணமாக பெரும்பாலான காய்கறிகளில் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. தூத்துக்குடியில் உள்ள காமராஜ் காய்கறி மார்க்கெட்டிற்கு ஒட்டன்சத்திரம், ஓசூர், தேனி, உசிலம்பட்டி போன்ற இடங்களில் இருந்து காலிப்ளவர் விற்பனைக்காக கொண்டு வரப்படும். தற்போது மேற்கண்ட இடங்களில் காலிப்ளவர் வி ளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதால் அதன் விலை உயர் ந்துள்ளது. சுமார் ஒரு கிலோ எடைகொண்ட காலிப்ளவர் பூ ஒன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு வரையிலும் 20 ரூபா ய்க்கு விற்பனை செய்யப்பட்டது. அந்த பூ தற்போது 40 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதேபோ ல் அனைத்து காய்களின் விø லயும் உயர்ந்துள்ளது. தூத்துக்குடி காய்கறி மார்க்கெட்டில் கத்தரிக்காய் 30 ரூபாய்க்கும், சின்னவெங்காயம் 35 ரூபாய்க்கும், பட்டர்பின்ஸ் 65 ரூபாய்க்கும், வெண்டைக்காய் 20 ரூபா ய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. வரும் நாட்களில் காய்களின் விலை இன்னும் அதிகரிக்கும் என்றும் காலிப்ளவர் வியாபாரி ராஜேஷ் தெரிவித்தார்.

**தழைச்சத்து அதிகம் கிடைக்க உதவி இயக்குனர் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 22,2011,00:16 IST

செய்துங்கநல்லூர் : தழைச்சத்து அதிகம் கிடைக்க இயற்கை உரங்களை விவசாயிகள் அதிகமாக பயன்படுத்த வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார். பயிர்களுக்கு அதிக தழைச்சத்து கிடைக்க விவசாயிகள் தக்கை பூன்கு என்ற இயற்கை உரத்தினை பயன்படுத்தலாம் என கருங்குளம் யூனியன் வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் கூறியதாவது, தக்கை பூன்கு என்ற புல் வகைப் பயிரினை விவசாயிகள் தற்போது தங்கள் நிலத்தில் விதைக்கலாம். இந்த பயிர் விதையை லேசான ஈரமுள்ள நிலத்தை உழுது அதில் 35 முதல் 40 நாட்களுக்கு பின் அந்த பயிரை மீண்டும் ஒரு உழவு செய்து தங்கள் நிலத்தில் உள் மடிய செய்ய வேண்டும். பின்னர் அந்த நிலத்தில் எந்த பயிரை பயிரிட்டாலும் அதிக பலன் கிடைக்கும். இவ்வாறு செய்வதால் பயிருக்கு தழைச்சத்து கிடைக்கிறது. பயிருக்கு பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இருக்காது. மண் வளம் அதிகமாக இருக்கும். அந்தக் காலங்களில் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள மரங்களின் குழைகளை

அறக்கி தங்கள் விவசாய நிலத்தில் மக்க வைப்பார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் இப்போது நடப்பதில்லை. மரம் கிடைப்பது அரிது. அதிலுள்ள குழைகளை அறக்கி நிலத்திற்கு எடுத்து செல்ல அதிக செலவாவதால் விவசாயிகள் செய்வது இல்லை. எனவே இந்த தக்கை பூன்கு பயிரை பயிரிட்டு விவசாயிகள் அதிக பயன் பெற கேட்டுக் கொள்கிறேன். இந்த பயிரின் விலை கிலோ ரூ.40 ஆகும். இதில் அரசு மானியம் கிலோவுக்கு ரூ.20 போக மீதி ரூ.20 மட்டுமே கிரையம் ஆகிறது. ஒரு ஏக்கருக்கு 20 கிலோ முதல் 25 கிலோ வரை தேவைப்படும். எனவே தேவைப்படும் விவசாயிகள் எங்கள் அலுவலகத்தை அல்லது களப்பணியாளர்களை அணுகி மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ளலாம் இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் வளர்ச்சிக்கு உதவுகிறதா வேளாண் பல்கலை?**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,22:51 IST

தமிழக வேளாண்மை வளர்ச்சிக்கு உதவ, தமிழக அரசு பல்வேறு ஏற்பாடுகளை செய்துள்ளது. அதில் வேளாண் பல்கலைக்கழகமும் ஒன்று. வேளாண் பல்கலையின் பணிகள், உண்மையிலேயே விவசாயத்தை வளர்க்க உதவுகிறதா என்பது, ஆய்வுப் பொருளாக மாறியுள்ளது. கடந்த 1868ல், சென்னை சைதாப்பேட்டையில் துவக்கப்பட்ட விவசாய பள்ளி, விவசாய கல்லூரியாகி, பின், 1971ம் ஆண்டு ஜூன், கோவையில், வேளாண் பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. முதலில் வேளாண் சார்ந்த படிப்புகளில் தீவிரம் காட்டிய வேளாண் பல்கலைக்கழகம், பின், தமிழக வேளாண் துறையுடன் சேர்ந்து, பல திட்டங்களில் கவனம் செலுத்த துவங்கியது. இதற்காக, பல்வேறு மாவட்டங்களில், விவசாயிகளின் கூட்டமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம், அவர்களுக்கு துல்லிய பண்ணை வேளாண் முறைகளை கற்றுத் தந்து, சாகுபடி செய்யும் பயிர், சாகுபடி செய்யும் முறை, உர மேலாண்மை, களை அகற்றும் முறை, பாசன திட்டம் ஆகியவற்றை பயிற்றுவிக்கிறது. வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களுடனும் இணைந்து, விவசாயிகளுக்கு கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்தி, நவீன பயிற்சி அளித்து வருவதாக, வேளாண் பல்கலைக்கழகம் கூறுகிறது. பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி கூறியதாவது: வேளாண் பல்கலைக்கழகம், கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய மூன்று பணிகளை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது. கல்விக்காக, 10 கல்லூரிகள், ஆராய்ச்சிக்காக, 36 வேளாண் ஆராய்ச்சி மையங்கள், விரிவாக்கத்திற்காக, 14 வேளாண் அறிவியல் நிலையங்கள் ஆகியன செயல்படுகின்றன. நெல், கரும்பு, பருத்தி, சிறு தானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தோட்டக்கலை, நறுமண பயிர்கள், மூலிகைகள், காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான பயிர்களையும் ஆராய்ச்சி செய்து, அவற்றின் அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுக்கிறோம். இதன் மூலம், 743 பயிர் ரகங்கள், 149 பண்ணை கருவிகள்,

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்நுட்பங்களை கண்டுபிடித்துள்ளோம். வேளாண் விஞ்ஞானிகளே நேரடியாக விவசாயிகளிடம் சென்று, புதிய விவசாய முறைகள் குறித்து விளக்கி, அதை அவர்களின் நிலத்தில் நிகழ்த்தி காட்டி, வயல் விழாக்களில் செயல் முறை விளக்கங்களை செய்து அவர்களுக்கு விளக்குகிறோம். இவ்வாறு முருகேச பூபதி கூறினார்.

விவசாயிகள் கூறுவது என்ன? : தேனி மாவட்டம் நாமலூரைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் சங்க செயலர் ரகுநாதன்:
பெயரளவிற்கு கூட்டங்கள் நடத்துவதுடன் நிறுத்தி கொள்ளாமல், விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கு பயிர் வளர்ப்பு குறித்த பயிற்சிகளை அளிக்க வேண்டும். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கத் தலைவர் வேலாயுதம்: இப்பல்கலை, கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து, வெறும் கண்டுபிடிப்புகளை செய்தால் மட்டும் போதாது. விவசாயிகள் பொருளாதார ரீதியாக உயர்வடைய, தேவையான வழிமுறைகளை செய்ய வேண்டும். அதை செய்வதில்லை. எந்த காலத்தில் எந்த பயிர்களை செய்யலாம்; எதற்கு நல்ல விலை கிடைக்கும்; அதன் தேவை எப்படி, அதிகப்படியாக சாகுபடி செய்ய வேண்டுமா; குறைந்த சாகுபடி செய்ய வேண்டுமா போன்ற தகவல்களை தர வேண்டும். இது போன்ற தகவல்களை, அவர்கள் தருவதில்லை. அவர்கள் தரும் ஒன்றிரண்டு தகவல்களும், விவசாயிகளுக்கு உதவும் விதத்தில் இல்லை. இவ்வாறு விவசாயிகள் கூறுகின்றனர். அசாதாரண தட்பவெப்ப நிலை, குறைந்த மழையளவு, அதிக வெள்ளம், அதிக வெப்பம் போன்ற இயற்கை இடர்பாடுகளை சமாளித்து, விவசாயத்தை காக்க வேண்டிய பொறுப்பில் தமிழகம் இருக்கும் நிலையில், வேளாண் பல்கலை, தன் செயல்பாட்டை செம்மைப்படுத்த வேண்டும் என, விவசாயிகள் விரும்புகின்றனர்.

**வேளாண்மை கூட்டுறவு வங்கியில் குறைந்த வாடகைக்கு இயந்திரங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,23:19 IST

விழுப்புரம் : தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் விவசாயத்திற்கு தேவையான இயந்திரங்கள் குறைந்த வாடகையில் வழங்கப்படுமென மண்டல இணைப்பதிவாளர் மலர்விழி தெரிவித்துள்ளார். கூட்டுறவு சங்கங்களின் விழுப்புரம் மண்டல இணைப்பதிவாளர் மலர்விழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விழுப்புரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கங்களில் விவசாய நவீன மயமாக்குதலில் தேவையான வேளாண் கருவிகள் ஸ்டாக் வைக்கப்பட்டுள் ளன. பவர்டில்லர், கோனா விடர், மார்க்கர், நெல் நடவு இயந்திரம் உள்ளிட்டவை குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. இதை விவசாயிகள்

பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரித்து பயன் பெறலாம். விவசாயம் சார்ந்த விழுப் புரம் மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியை பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் செலவை குறைக்கும் வகையிலும், பாய் நாற்றங்கால் முறை, நெல் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்து விவசாயிகள் நிறைந்த பயனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் இயந்திரங்கள் பயன்பாட்டில் குறைந்த வாடகைக்கு அளிக்கப்படும்.
கடந்தாண்டு விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டுறவு துறை மூலம் 458 ஏக்கர் இயந்திர நெல் நடவு செய்து விவசாயிகள் பயனடைந்துள்ளனர். உளுந்தூர்பேட்டை, சாத்தாம்பாடி, மிட்டாமண்டகப்பட்டு, மணலூர்பேட்டை மற்றும் அ.பாண்டலம் ஆகிய தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையங்களில் நிலத்தடி நீர் பரிசோதனை, மண் பரிசோதனை செய்யப்படுவதுடன், உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை செய்யப்படுவதுடன், வேளாண்மை குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது.
இந்த சேவையில் குறைபாடுகள் இருந்தால் தொடர்புடைய சரக துணைப்பதிவாளர் அலுவலகங்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம். விழுப்புரம் சரக துணைப்பதிவாளர் அலுவலகம்- 04146-250700, திண்டிவனம் சரக துணைப் பதிவாளர் அலுவலகம்- 04147-222812, திருக்கோவிலூர் சரக துணைப்பதிவாளர் அலுவலகம்-04153-252345 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு மண்டல இணைப்பதிவாளர் மலர்விழி தெரிவித்துள்ளார்.

**நெகமத்தில் கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,21:28 IST

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 62.60 ரூபாய் விலை கிடைத்தது.நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 10 மூட்டை கொப்பரை வந்தது. முதல் தரம் 5 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் ரூ.57.30 முதல், அதிகபட்சம் ரூ.60.15 வரை விலை கிடைத்தது. இரண்டாம் தரம் 5 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 36 ரூபாய் முதல், அதிகபட்சம் 50 ரூபாய் வரை விலை கிடைத்தது.

**விவசாய சாகுபடி முறை பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,21:28 IST

ஆனைமலை : ஆனைமலை தோட்டக்கலைத்துறை சார்பாக வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.ஆனைமலை தோட்டக்கலைத்துறையினரால் வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கு கடந்த 9ம் தேதி முதல் 23ம் தேதி வரை 15 நாட்கள் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சியில் அலுவலகப் பணிகள், திட்டங்கள், மானியம், விவசாயத்துறையில் ஏற்படும் பிரச்னைகள், விவசாய சாகுபடி முறைகள் குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது. வேட்டைக்காரன்புதூரில் உள்ள பசுமைக்குடிலில் ரோஜா மலர் சாகுபடி குறித்தும், பராமரிப்பு, உற்பத்தி, நோய்தாக்குதல் குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியில் 25 மாணவர்கள் பங்கேற்றனர். மாணவர்களுக்கு ஆனைமலை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) மோகன் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர்கள் ராமமூர்த்தி, முருகன், கல்யாணம், மணிகண்டன் ஆகியோர் பயிற்சியளித்தனர்.

**தேக்கடி வனப்பகுதியில் சந்தனமரம் கணக்கெடுப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,22:42 IST

கூடலூர் : தேக்கடி வனப்பகுதியில் சந்தனமரங்கள் அதிகம் உள்ளன. இந்த மரங்கள் அதிக அளவில் திருடப்பட்டு வருகின்றன. இதற்காக ரேஞ்சர் ஸ்டீபன் ஸ்டான்லி தலைமையில் சந்தனமரங்களை கணக்கெடுக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். முதற்கட்டமாக சகுந்தலகாடு, கொக்கரக்கண்டம், தேக்கடி ரோடு ஆகிய பகுதியில் உள்ள சந்தனமரங்களின் எண்ணிக்கை, அதன் உயரம், சுற்றளவு ஆகியவற்றை கணக்கெடுத்து அதனை கம்ப்யூட்டரில் பதிவு செய்கின்றனர். பதிவு செய்த மரங்களை பெயின்ட் மூலம் அடையாளம் செய்துள்ளனர். இதனால், மரக்கடத்தலை தடுக்க முடியும் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

**விவசாய கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.44 கோடி பயிர்க்கடன் வழங்க முடிவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 21,2011,22:32 IST

சிவகங்கை : "" தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நடப்பாண்டு 44 கோடி ரூபாய் பயிர்கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளதாக,'' கூட்டுறவு இணை பதிவாளர் காந்திநாதன் தெரிவித்தார். மாவட்டத்தில் நெல், கரும்பு, பயிர் தானிய உற்பத்தியை பெருக்க, அரசு விவசாயத்துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இதற்காக, கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு போதிய பயிர் கடன் வழங்க திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் உணவு பொருள்

உற்பத்தியை பெருக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக நடப்பு பருவத்திற்கு (2011-2012) விவசாயிகள் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை நடவு செய்ய ஏதுவாக விவசாயிகளுக்கு வேண்டிய பயிர் கடன் வழங்க கூட்டுறவுத்துறை பதிவாளர் நிதி ஒதுக்கியுள்ளார். இதற்காக, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 143 தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு, பயிர் கடன் வழங்க 44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு இணைபதிவாளர் காந்திநாதன் கூறுகையில்,"" விவசாயிகளை ஊக்கப்படுத்தும்நோக்கில், பயிர் கடன் வழங்கப்படுகிறது. அந்த வகையில் கடந்த 2010- 2011ல் 40 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயித்தோம். நடப்பாண்டு (2011-2012) விவசாயிகளுக்கு தடையின்றி கடன் கிடைக்க, 44 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயித்துள்ளோம். இவை அனைத்து தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் பிரித்து தரப்படும். அந்தந்த வங்கி அதிகாரிகள் விவசாயிகளின் நிலங்களை ஆய்வு செய்து, உண்மை தன்மை இருக்கும் பட்சத்தில் கடன் தரவேண்டும். விவசாயம் செய்யாமல் பயிர் கடன் தந்தால், வங்கி அதிகாரிகள் மீது நடவடிக்கை பாயும்," என்றார்.

## *ரப்பர் விற்பனை 1.9% சரிவு*



*எஸ் சனந்தகுமார் ,கொச்சி*

*கடந்த இரண்டு மாதங்களாக கார்கள் உள்ளிட்ட மோட்டார் வாகனங்கள் விற்பனை*

வளர்ச்சி சற்று குறைந்துள்ளதால், ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது, மே மாதத்தில் இயற்கை ரப்பர் விற்பனை 1.9 சதவீதம் சரிந்து 81,000 டன்னாக குறைந்துள்ளது. எனினும் சென்ற ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களை காட்டிலும் நடப்பு ஆண்டின் இதே மாதங்களில் ரப்பர் விற்பனை 3.9 சதவீதம் அதிகரித்துள்ளது.

டயர் நிறுவனங்கள்

சென்ற நிதி ஆண்டில் மோட்டார் வாகனங்கள் விற்பனையில் சுமார் 30 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. எனவே வாகன நிறுவனங்கள் டயர்களை அதிக அளவில் வாங்கி வந்தன. இதனால் டயர் நிறுவனங்களுக்கு இயற்கை ரப்பருக்கான தேவைப்பாடு அதிகரித்ததால் விற்பனை விறுவிறுப்பாக இருந்தது. தற்போது வாகனங்கள் விற்பனை வேகம் குறைந்துள்ளதால் பல கார் நிறுவனங்கள் உற்பத்தியை குறைப்பது குறித்து ஆலோசித்து வருகின்றன.

சென்ற ஆண்டில் டயர்கள் விற்பனை ஒட்டுமொத்தத்தில் 22 சதவீதம் அதிகரித்திருந்தது. தற்போது இது 12 சதவீதமாக குறைந்துள்ளது. உள்நாட்டில் பயன்பாடு குறைந்துள்ள நிலையில் இயற்கை ரப்பர் இறக்குமதி தொடர்ந்து அதிகரித்த நிலையில்தான் உள்ளது. நடப்பாண்டு ஏப்ரல், மே மாதங்களில் ரப்பர் இறக்குமதி 26,248 டன்னாக உள்ளது. இது சென்ற ஆண்டின் இதே காலத்தில் 22,811 டன்னாக இருந்தது.

ரப்பர் உற்பத்தி

நம் நாட்டில் நடப்பு நிதி ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் ரப்பர் உற்பத்தி 6 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. உற்பத்தி அதிகரிப்பு, இறக்குமதி உயர்வு மற்றும் பயன்பாடு குறைந்தது போன்ற பல்வேறு காரணங்களால் ரப்பர் விலை கணிசமாக குறையும் என்ற எதிர்பார்ப்பு சந்தை வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளது.